# இலங்கை

அரசியல் யாப்பு, பௌத்த மதத்திற்குத் ‘‘தலையாய இட’’த்தை வழங்கியுள்ளது. எனவே, அதைப் பாதுகாப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகின்றது. ஆனால், அரசியல் யாப்பு, அதை, அரச மதமாக ஏற்றங்கீகரிக்கவில்லை. ஏனைய சமயங்களைச் சேர்ந்தவர்கள், தத்தமது சமய நம்பிக்கைகளைச் சுதந்திரமாகப் பின்பற்றுவதற்கான உரிமைக்கு அரசியல் யாப்பு வழிவகுத்துள்ளது.

இவ்வறிக்கை உள்ளடக்கும் காலப்பகுதியில், சமயச் சுதந்திரத்திற்கு அரசாங்கம் வழங்கும் மரியாதை தொடர்பான அந்தஸ்தில் எவ்வித மாற்றமும் இல்லை. சமயச் சுதந்திரம் தொடர்பாக, அரசாங்கம் பகிரங்கமாக ஒப்புதல் தெரிவித்த போதிலும், நடைமுறையில், சில பிரதேசங்களில் பிரச்சினைகள் இடம்பெற்றுள்ளன.

தீவிரவாத பௌத்தர்கள், கிறிஸ்தத் தேவாலயங்களைத் தாக்கிய சம்பவங்கள் சிதறலாக இடம்பெற்றன. அத்துடன், கட்டாய மதமாற்றங்கள் பற்றி இடம்பெற்றவாறிருக்கும் குற்றச்சாட்டுக்களின் காரணமாக சமூகத்தில், சில மன அலைவு நிலைமைகள் இடம்பெற்றன. அரசாங்கத்திற்குச் சார்பான தமிழ் போராளிகள், கிழக்கு மாகாணத்தில் முஸ்லிங்கள் மீது ஏற்படுத்திய தாக்குதல்களும் இடம்பெற்றன. இவை, இஸ்லாமிய சமுதாயத்தினரின் சமய நம்பிக்கைகள் தொடர்பாக ஏற்பட்டன என்பதை விட, இவை, இனரீதியான உள அலைவு நிலைமையினாலும் அரசியல்ரீதியான உள அலைவு நிலைமையினாலும் ஏற்பட்டன என்று கூறுவது பொருந்துமெனத் தோன்றுகின்றது.

மனித உரிமைகளை முன்னேற்றுவதற்கான தனது முற்றுமுழுதான கொள்கையின் ஒரு பகுதியாக, ஐக்கிய அமெரிக்க அரசாங்கம், சமயச் சுதந்திரம் பற்றி அரசாங்கத்துடன் கலந்துரையாடுகின்றது. தேவாலயத் தாக்குதல்களைப் பற்றிய, ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தின் அக்கறையை ஐக்கிய அமெரிக்கத் தூதரக அலுவலர்கள், அரசாங்கத் தலைவர்களுக்கு அறிவித்து, குற்றவாளிகளைக் கைது செய்து, குற்றவாளிகளுக்கெதிராக வழக்குத் தொடரும்படி அவர்களைத் தூண்டியது. மத மாற்றத்திற்கெதிரான சட்டங்கள், மதச் சுதந்திரத்தின் மீது ஏற்படுத்தக்கூடிய பாதகமான தாக்கங்களைப் பற்றியும் தாம் கொண்டுள்ள கரிசனையைத் தூதரக அலுவலர்கள் அரசாங்கத்திடம் எடுத்துக்கூறினார்கள். ஐக்கிய அமெரிக்க அரசாங்கம், பொதுவாக, மதச்சுதந்திரம் தொடர்பாகத் தான் கொண்டுள்ள அக்கறைகளைப் பற்றி தொடர்ந்து, சமயத் தலைவர்களுடன் கலந்துரையாடி வருகின்றது.

## பிரிவு I. மதம் சார்ந்த குடித்தொகையியல்

இலங்கை, 25,322 சதுர மைல் பரப்பளவைக் கொண்டுள்ளது. அதன் சனத்தொகை 20.1 மில்லியனாகும்.

சனத்தொகையில் ஏறுத்தாழ 70 சதவீதத்தினர் பௌத்தர்களாகவும் 15 சதவீதத்தினர் இந்துக்களாகவும் எட்டு சதவீதத்தினர் கிறிஸ்தவர்களாகவும் ஏழு சதவீதத்தினர் முஸ்லிங்களாகவும் இருக்கின்றனர். கிறிஸ்தவர்கள் மேற்கில் செறிவாக உள்ள போக்கு காணப்படுகின்றது. கிழக்கின் பெரும் பகுதி முஸ்லிங்களைக் கொண்டிருக்க, வடக்கு, ஏறத்தாழ முழுமையாக இந்துக்களைக்கொண்டதாக இருக்கின்றது.

பெரும்பான்மையினராகவுள்ள சிங்கள சமுதாயத்தின் உறுப்பினர்களுள் பெருந்தொகையானோர், தேரவாத பௌத்தர்களாவர். மிகப் பெரிய இனச் சிறுபான்மையினர்களுள், பெருந்தொகையினராக இருக்கும் தமிழர்கள் இந்துக்களாவர். ஏறத்தாழ, சலக முஸ்லிங்களும் சுன்னிகளாவர். போரா சமுதாயத்தினர் உட்பட, இவர்களுள் ஒரு சிறு தொகையினர் ீயாக்களாவர். கிறிஸ்தவர்களுள் ஏறத்தாழ 80 சதவீதத்தினர் ரோமன் கத்தோலிக்கராவர். அங்கிலிக்கன் மற்றைய பிரதான நீரோட்டத் தேவாலயங்களையும் சேர்ந்தோர் நகரங்களில் காணப்படுகின்றனர். ஏழாம் நாள் அட்வென்டிஸ்ட்கள், ஜெஹோவாவின் சாட்சிகள், மெதடிஸ்ட்கள், பப்டிஸ்ட்கள், ஒல்லாந்தச் சீர்த்திருத்தத் தேவாலயத்தைச் சேர்ந்தோர்கள், அங்கிலிக்கன்கள், பென்டிகோஸ்ட்கள், அஸெம்ப்ளீஸ் ஒ.ஃப் கோட் என்ற பிரிவுகளைச் சேர்ந்தோரும் காணப்படுகின்றனர். சமயம் பரப்பும் கிறிஸ்தவக் குழுக்கள், அண்மை ஆண்டுகளில் வளர்ச்சியுற்றுள்ள போதிலும் அவற்றினுடைய அங்கத்தவர்கள், சிறு தொகையினராகவே இருக்கின்றார்கள்.

## பிரிவு II. மதச் சுதந்திரத்திற்கு அரசாங்கம் வழங்கும் மதிப்பு நிலை

### சட்டம்சார் / கொள்கைசார் சட்டகம்

அரசியல் யாப்பின் 10ஆம் உறுப்புரை, "ஒவ்வொருவரும் தனது தெரிவிற்கமைய ஒரு சமயத்தை அல்லது நம்பிக்கையைப் பெற்றிருத்தலுக்கான அல்லது பின்பற்றுவதற்கான சுதந்திரம் உட்பட, சிந்தனைச் சுதந்திரம், மனச்சாட்சிச் சுதந்திரம், மதச் சுதந்திரம் என்பவற்றிற்கு உரித்துடையவராவார்." என்று கூறுகின்றது. 14 (1) (ந) என்ற உறுப்புரை, ஷஷதானாக அல்லது மற்றையோருடன் கூடி, பொது இடத்திலோ, தனிப்பட்ட விதத்திலோ, தனது சமயம் அல்லது சமய வழிபாட்டிலுள்ள நம்பிக்கை, அனு'டானங்கள், நடைமுறைகள், போதனைகள் என்பவற்றை வெளிப்படுத்தும் உரிமையை"ப் பிரஜைக்கு வழங்குகின்றது.

சமய விவகார அமைச்சு, நான்கு திணைக்களங்களைக் கொண்டுள்ளது. இவை பௌத்த மத, இந்து மத, இஸ்லாமிய மத, கிறிஸ்தவ மத விவகாரங்களைக் கையாளுகின்றன. இவற்றின் ஆணைகளை வரைவிலக்கணப்படுத்தும் சட்டவாக்கங்களின் பிரகாரம், ஒவ்வொரு திணைக்களமும் சமூகத்தின் சமய விழுமியங்களைப் பதியச் செய்து, நற்பண்புகளைக் கொண்ட சமூகத்தை முன்னேற்றும் விதத்தில் நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்கிச் செயற்படுத்த வேண்டும்.

முதன்முதலாக, 2004ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட, ஷமதமாற்றத்திற்கெதி'ரான சட்டமூலத்தின் மீது, பாராளுமன்றம் எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. 2004ஆம் ஆண்டு மே மாதத்தில், ஷநன் நெறிசாராத' மதமாற்றங்களைக் குற்றவியற் தவறெனக் கொள்ளும் வகையில், ஜாதிக்க ஹெல உருமய (துர்ரு), ஒரு சட்டமூலத்தைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தது. சட்டமூலத்திலுள்ள சில பிரிவுகள் அரசியல் யாப்பிற்கு முரணாக உள்ளனவென்று உச்ச நீதி மன்றம் விதித்த போதிலும், 2005 ஆம் ஆண்டு, அச்சட்டமூலத்தை இரண்டாவது வாசிப்பிற்காக ஜாதிக்க ஹெல உருமய சமர்ப்பித்தது. இதன் பின்னர், இவ்வுத்தேசச் சட்டமூலம், விசே' பாராளுமன்றக் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. இக்குழு, சட்ட மூலத்தை மீளாய்வு செய்து, அதை, மூன்றாம் வாசிப்பிற்காக மீண்டும் பாராளுமன்றத்திடம் சமர்ப்பித்தது. 2010 ஆம் ஆண்டில் இச்சட்டமூலத்தை மீண்டும் முன்னெடுக்கப்போவதாக, ஜாதிக்க ஹெல உருமய (துர்ரு) குறிப்பிட்டுள்ளது.

சமயக் குழுக்கள் அரசாங்கத்தில் பதிவு செய்ய வேண்டும் என்ற தேவை இல்லை. இருப்பினும், நிதிக் கொடுக்கல் வாங்கல்களை நடத்துவதற்கும் வங்கிக் கணக்குகளைத் திறப்பதற்கும், அவை, பாராளுமன்ற அதிகாரச் சட்டம் ஒன்றினால், வணிகம் என்ற முறையில் கம்பனிகள் அதிகாரச் சட்டம் ஒன்றின் கீழ், சங்கங்களின் கட்டளைச் சட்டத்தின் கீழ், அல்லது நம்பிக்கைப் பொறுப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ், இணைக்கப்பட வேண்டும். 1960 ஆம் ஆண்டு வரை, பெரும்பாலான தேவாலயங்கள், ஒன்றில் கத்தோலிக்கத் தேவாலயங்களாக அல்லது அங்கிலிக்கன் தேவாலயங்களாக இருந்ததுடன், அவை பாராளுமன்ற அதிகாரச் சட்டங்களினால் இணைக்கப்பட்டிருந்தன. 1970கள் தொடக்கம், சமயத்தைப் பரப்பும் குழுக்கள் உட்பட, புதிய கிறிஸ்தவ குழுக்கள், நாட்டில் தோன்ற ஆரம்பித்த போது, கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் கீழ் தேவாலயங்களைப் பதிவு செய்தல், மேலும் வழமையாயிற்று. காலப்போக்கில், சமயத்தைப் பரப்பும் மதக்குழுக்கள், 'நன் நெறிசாராத மதமாற்றங்க'ளில் ஈடுபட்டுவருவதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது. இதன் விளைவாக, புதிய சமயக் குழுக்களைக் கம்பனிகளாகப் பதிவு செய்வதற்கு அரசாங்கம் தயங்குகின்றது. புதிய மதக் குழுக்களைப் பதிவு செய்வது, அல்லது, கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்வது, மேன்மேலும் கடினமாக இருப்பதாக மதத்தைப் பரப்பும் குழுக்கள் அறிவிக்கின்றன. சங்கங்களின் கட்டளைச் சட்டம் அல்லது நம்பிக்கைப் பொறுப்புக்கள் கட்டளைச் சட்டம் என்பவற்றின் கீழ்ப் பதிவு செய்தால், சிற்சில நிதிக் கொடுக்கல் வாங்கல்களை நடத்துவதற்குத் தேவாலயங்களுக்குள்ள ஆற்றல் வரையறுக்கப்படுகின்றது.

விவாகரத்து, பிள்ளையின் கட்டுக்காப்பு, மரபுரிமை என்பன உட்படக் குடும்பச் சட்டத்துடன் தொடர்புற்ற வி'யங்கள், சம்பந்தப்பட்ட இன அல்லது சமயக் குழுவின் வழக்கச் சட்டத்திற்கிணங்கத் தீர்த்துவைக்கப்பட்டன. பெண்கள் விவாகஞ்செய்யக்கூடிய ஆகக் குறைந்த வயது 18 ஆகும். பூப்பெய்தியதும் பெண்கள் விவாகஞ்செய்யும் வயதை அடைந்துவிட்டார்கள் என்ற வழக்கஞ்சார்ந்த சமய நடைமுறைகளைத் தொடர்ந்தும் பின்பற்றும் முஸ்லிங்களைப் பொறுத்தளவில், 18 வயதெல்லை பொருந்தாது. இஸ்லாமிய வழக்கத்தின் பிரகாரம், நிதிரீதியாகக் குடும்பத்தைக் கொண்டுநடத்தும் ஆற்றலைப் பெற்றதும் ஆண்கள் விவாகஞ் செய்யலாம்.

பௌத்தம் அரசியல் யாப்புசார் முன்னுரிமையைப் பெற்றிருந்தபோதிலும், ஏனைய மதக் குழுக்களில் பிரதான சமய விழாக்கள் பலவற்றை, அரசாங்கம் தேசிய விடுமுறைகளாகக் கணிக்கின்றது. இந்து சமயத்தின் பண்டிகைகளான தைப்பொங்கல், புது வருடப் பிறப்பு, தீபாவளி என்பனவும் இஸ்லாமிய சமயத்தவரின் பண்டிகைகளான ஹஜ்ஜி, ரம்ஸான், முகமது நபியின் பிறந்த தினம் என்பனவும் கிறிஸ்தவ சமயத்தவரின் பண்டிகைகளான பெரிய வெள்ளி, நத்தார் என்பனவும் இவ்விடுமுறைகளுள் அடங்கும்.

அரசாங்கப் பாடசாலைகளின் கலைத் திட்டத்தில், சமயம் ஒரு கட்டாய பாடமாகும். ஒரு பிள்ளை பௌத்த மதத்தையா, இஸ்லாம் மதத்தையா, இந்து மதத்தையா, கிறிஸ்தவ மதத்தையா கற்கப்போகின்றதென்பதைப் பெற்றோரும் பிள்ளைகளும் தெரிவு செய்யலாம். ஏனைய சமயக் குழுக்களைச் சேர்ந்த மாணாக்கர்களின் சமயங்கள் தொடர்பாகக் கற்கும் ஏற்பாடுகள் அவர்களுக்கு வழங்கப்படாமையால், அவர்கள், பாடசாலை முறைமைக்கு வெளியில் தத்தம் சமயங்களைப் பற்றிக் கற்கலாம். சகல பாடசாலைகளும், சமயம் தொடர்பாகக் கல்வித் திணைக்களம் வழங்கியுள்ள கலைத் திட்டத்தையே பின்பற்றுகின்றன. கல்விப் பொதுத்தராதரச் சாதாரண தரப் பரீட்சைக்குச் சமய பாடம், கட்டாய பாடமாகும். லண்டன் சாதாரண தரப் பரீட்சைக்கான கலைத்திட்டத்தைப்

பின்பற்றும் சர்வதேசப் பாடசாலைகள், தமது பாடசாலைகளில், சமயக் கல்வியைக் கற்பிக்காமல் விடலாம்.

**மதச் சுதந்திரம் தொடர்பான மட்டுப்பாடுகள்**

இந்த அறிக்கையில் உள்ளடக்கப்படும் காலப்பகுதியில், மதச் சுதந்திரத்திற்கு அரசாங்கம் வழங்கும் மரியாதை தொடர்பான அந்தஸ்தில் எவ்வித மாற்றமும் இடம்பெறவில்லை. மதச் சுதந்திரம் தொடர்பாக அரசாங்கம் பகிரங்கமாக ஒப்புதல் தெரிவித்தபோதிலும் நடைமுறையில் சில பிரதேசங்களில் பிரச்சினைகள் காணப்பட்டன. வெளி நாட்டு மதகுருமார் நாட்டில் பணியாற்றலாம். ஆனால், கடந்த மூன்று தசாப்தங்களில், இவ்வாறு பணி புரிவதற்கான தற்காலிக அனுமதிச்சீட்டுக்களை வழங்குவதை அரசாங்கம் வரையறுத்துள்ளது. முன்னரே, முறைசார் விதத்தில் அரசாங்கத்துடன் பதிவு செய்துகொண்ட மதப் பிரிவுகளுக்கு, பொதுவாக, பணி புரிவதற்கான அனுமதி வழங்கப்பட்டது. நாட்டில், சமயப் பணிகளில் ஈடுபட்டுள்ள பெரும்பாலானோர் சுதேச மக்களாவர்.

வெளி நாட்டு மதகுருமாருக்கு, முன்னர், ஐந்து வருடங்களுக்கு வேலை அனுமதிச் சீட்டு வழங்கப்பட்ட போதிலும், தற்பொழுது ஒரு வருடத்திற்கு மட்டுமே அனுமதிச்சீட்டு வழங்கப்படுகின்றதுÉ வேலைக்கான அனுமதிச் சீட்டு நீடிக்கப்படலாம். கடந்த காலங்களில், அபிவிருத்தித் திட்டங்களில் பணி புரிந்த வெளி நாட்டுச் சமய ஊழியர்கள் பலர், குடிவரவு அதிகாரிகளுடன் எவ்விதப் பிரச்சினையையும் எதிர் நோக்காமல், நாட்டினுள் பிரவேசிப்பதற்கு உல்லாசப் பயணிகளுக்கான வீஸாக்களைப் பயன்படுத்துதல் ஒரு வழமையாகவிருந்தது. எனினும், இந்த அறிக்கையில் உள்ளடக்கப்படும் காலப்பகுதியில், இவ்வழக்கத்தைத் தொடர்ந்தும் பின்பற்ற முடியாதென, அரசாங்க அதிகாரிகள், சமய ஊழியர்கள் சிலருக்கு அறிவித்தனர். முறைசார்ந்த விதத்தில் அவர்கள் நாடு கடத்தப்படாவிட்டாலும், நாட்டிலிருந்து வெளியேறும்படி, வலிதாக ஊக்குவிக்கப்பட்டார்கள்.

சேவைகளை வழங்குவதில் அரசாங்கம் பாரபட்சம் காட்டியதென மதம் பரப்பும் சில கிறிஸ்தவக் குழுக்கள் முறையிட்டன. அரசாங்கப் பாடசாலைகள், கிறிஸ்த பிள்ளைகளை ஏற்றுக்கொள்ள மறுத்தன அல்லது, பௌத்தத்தைக் கற்கும்படி அவர்களை நிர்ப்பந்தித்தன என்றும் கத்தோலிக்கத் தேவாலயத்தைச் சாராத கிறிஸ்தவர்களுக்கு, கொழும்பு மாநகர சபை, மதிய உணவு வழங்க மறுத்ததென்றும் இக்குழுக்கள் அறிவித்தன.

**மதச் சுதந்திரத்தைத் தவறாகப் பயன்படுத்துதல்**

இலங்கையில் வாழும் தமிழருக்கு, பிரதானமாக இந்து சிறுபான்மையினருக்குத் தனி நாடு கோரிப் போரிடும் ஒரு பயங்கரவாத இயக்கமாகிய, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கெதிராக, 1983 ஆம் ஆண்டு முதல் அரசாங்கம் போரிட்டுவந்துள்ளது. 2001ஆம் ஆண்டில், அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளின் இயக்கமும் ஒரு தலையான யுத்த நிறுத்தத்தை அறிவித்தன. 2002 ஆம் ஆண்டில், இவை இரண்டும் கூட்டான போர் நிறுத்த உடன்படிக்கை ஒன்றிற்கு இணங்கின. வன்முறையில் அதிகரிப்பு ஏற்பட்டதுடன், 2005ஆம் ஆண்டின் இறுதியில் சமாதானச் செயன்முறையில் தாமதம் ஏற்பட்டது. 2006ஆம் ஆண்டில், இரு தரப்பினருக்கிடையிலும், மீண்டும் போர் மூண்டது. 2008ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில், அரசாங்கம், போர் நிறுத்த உடன்படிக்கையை

முடிவுறுத்தியது. 2009 ஆம் ஆண்டு மே மாதம், மோதல், முறைசார் விதத்தில் முடிவடைந்தது. மோதல்கள், மொழி, இன, அரசியல் வேறுபாடுகளை அடிப்படையாகக் கொண்டிருந்ததால், குறிப்பிட்ட ஒரு தொகுதி சமய நம்பிக்கைகளைச் சார்ந்திருத்தல், இம்மோதல்களில் குறிப்பிடத்தக்களவு பங்கு வகிக்கவில்லை. பௌத்தர்கள், இந்துக்கள், இஸ்லாமியர், கிறிஸ்தவர்கள் என்ற யாவரும் மோதல்களினால் பாதிக்கப்பட்டனர். 1983ஆம் ஆண்டு முதல், ஏறத்தாழ 100,000 மக்கள் இறந்தனர். இராணுவத்தினரும் அரசாங்கத் துணைப் படையினரும் தமிழ்ப் புலிகளும், மோதல்களில் சமயக் கட்டிடங்களை ஈடுபடுத்தியதாக, அல்லது, மோதல் பிரதேசங்களில் ஷெல் தாக்குதல்களை மேற்கொள்வதன் மூலம், அவைகளை அபாயத்திற்குள்ளாக்கியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. 2009 ஆம் ஆண்டு ஏப்ரில் மாதத்திலும் மே மாதத்திலும் போரின் இறுதி நாட்களில், சமயக் கட்டிடங்கள் பெரும்பாலும் குடிமக்களின் உறைவிடங்களாகப் பயன்படுத்தப்பட்ட போது, சமயக் கட்டிடங்களை அடுத்து, தமிழீழ விடுதலைப் புலிகள் பீரங்கி ஆயதங்களை வைத்ததாகவும், அதே அமைவிடங்களில் இராணுவம் கனமான ஆயுதங்களினால் சுட்டதாகவும் உறுதிப்படுத்தப்படாத அறிக்கைகள் கிடைத்துள்ளன.

இவ்வறிக்கைக்குட்பட்ட காலப்பகுதியில், வடக்கிலும் கிழக்கிலும் உள்ள வழிபாட்டுத் தலங்களில், தனிப்பட்டவர்களுக்கெதிராக, பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமைத் துஷ்பிரயோகங்கள் இடம்பெற்றுள்ளன. இச்சம்பவங்கள், மதச் சுதந்திரத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்திய போதிலும், இத்துஷ்பிரயோகங்கள் மத அடிப்படையில் தூண்டப்படவில்லை. எதிர்மாறாக, இவை, மோதல் நிலைமையின் ஒரு விளைவேயாகும். 2006ஆம் ஆண்டு முதல், மோதல்கள் காரணமாக இடம்பெற்ற கொலைகள் பற்றியும் காணாமற்போதல் பற்றியும் மிகப் பல அறிக்கைகள் கிடைத்துள்ளன. மனிதாபிமானப் பிரச்சினைகளைப் பற்றிப் பேசிய சில கத்தோலிக்க மதகுருமாரும் காணாமற்போனோருள் அடங்குவர். இவ்வறிக்கைக்குட்பட்ட காலப்பகுதியில் இடம்பெற்ற இக்கொலைகளும் காணாமற்போதற் சம்பவங்களும் சமயரீதியாகத் தூண்டப்பட்டவை என்று கூறுவதற்கு ஆதாரங்கள் இல்லை.

2009 ஆம் ஆண்டு, மே மாதம் கடற்படை ஆளணியினரும் இராணுவக் கொமாண்டோக்களும், பொலீஸ் அலுவலர் ஒருவருடன் கொழும்பின் கிழக்கிலிருந்த (அப்பிரதேசத்தின் பாதுகாப்புப் பிரச்சினைகளை கடற்படை மேற்பார்வை செய்கின்றது), இலங்கை, தேசிய கிறிஸ்தவ மதம் பரப்பும் நட்புறவு அமைப்பின் அலுவலகத்திற்கு விஜயம் செய்தார்கள். அவர்கள் நட்புறவு அமைப்பின் பொதுச் செயலாளரையும் அவரது சிரேஷ்ட அலுவலர்களையும் விசாரணை செய்தார்கள், அலுவலக ஆவணங்களையும் அலுவலக வளவையும் சோதனை செய்தார்கள்.

கலாச்சார விவகார அமைச்சில் பதிவு செய்திருந்தாலன்றி அஸெம்ப்ளி ஒ.்.ப் கோட் (AOG) தேவாலயம் மூடப்பட வேண்டுமென்று, அஸெம்ப்ளி ஒ.்.ப் கோடைச் சேர்ந்த பாதிரியார் ஸ்டான்லி ரோய்ஸ்டனுக்கு, களுத்துறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர், அமைச்சர் ரோஹித்த அபேகுணவர்தன, 2009ஆம் ஆண்டு ஏப்ரில் மாதம் அறிவித்தார். களுத்துறையிலுள்ள அஸெம்ப்ளி ஒ.்.ப் கோட் தேவாலயம், கடந்த 60 ஆண்டுகளுக்கும் மேலாக இயங்கிவருகின்றது. 800 இற்கும் மேற்பட்டோர் அங்கத்தவர்களாக இருக்கின்றார்கள். அஸெம்ப்ளி ஒ.்.ப் கோட் தேவாலயத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களைப் பற்றி, பாதிரியார் றொய்ஸ்டன் பிரதேச பொலீஸ் நிலையத்திற்கு அறிவித்துக்கொண்டிருக்கும் போது, இத்தாக்குதலை மேற்கொண்ட ஜாதிக ஹெல உருமயவுடன் இணைந்த சில பிக்குமார், பாதிரியாரைக் கொலை செய்வதாக அச்சுறுத்தினார்கள்.

2009 ஆம் ஆண்டு ஏப்ரில் மாதம், மாகாண சபை உறுப்பினரும் சட்டத்தரணியுமான ஃபைஸ் முஸ்தாஃபாவும் அசோக வீரசூரியவும், அஸெம்ப்ளி ஒஃப் கோட் தேவாலயத்தின் பேராளர்களுடன், ஜனாதிபதியின் சிரேʼட மதியுரையாளர் பஸில் ராஜபக்ஸவைச் சந்தித்தார்கள். அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன கூறியதற்கு எதிர்மாறாக, கலாச்சார விவகார அமைச்சில், தேவாலயங்கள் பதிவு செய்ய வேண்டியதில்லை என்ற உறுதி மொழியை வழங்கினார். பதிவு செய்தல் பற்றிய நடைமுறை ஒன்றை வகுக்கும்படி, சமய விவகார அமைச்சிற்கு அறிவுறுத்தல் வழங்கப்படுமென்றும், ராஜபக்ஸ மேலும் கூறினார். தேவாலயங்களின் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்களைப் பற்றி நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்றும், சட்டமும் ஒழுங்கும் நிலவுகின்றதென்பதை உறுதிப்படுத்தும்படி சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்படுமென்றும் தத்தமது சமய நம்பிக்கைகளைப் பின்பற்றுவதற்கு ஒவ்வொரு பிரஜைக்கும் உள்ள உரிமை உறுதிப்படுத்தப்படுமென்றும் கூறினார்.

2008 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம், பௌத்த பிக்கு ஒருவரினதும் பிரதேச அரசியல்வாதி ஒருவரினதும் தலைமையின் கீழ், ஏறக்குறைய 60 பேரைக்கொண்ட ஒரு குழு, புத்தள மாவட்டத்தில் மளியங்குளத்திலுள்ள, ப்ரெயர் டவர் தேவாலயத்தை வந்தடைந்தார்கள். பகுதி அளவில் கட்டி முடிக்கப்பட்ட மண்டபத்தை, ஞாயிற்றுப் பாடசாலைக்காகத் தேவாலயம் பயன்படுத்தி வந்தது. இவ்வாறு வந்தவர்கள் இதற்குத் தீயிட்டனர். அத்தேவாலயத்தின் சுற்றுப்புறத்தில் வாழ்ந்த, தேவாலய அங்கத்தவர்களையும் தீவைப்பைத் தடுப்பதற்காக சம்பவ இடத்திற்கு வந்தவர்களையும் குழுவினர் தாக்கினார்கள். கூடியிருந்தோரிடையே காணப்பட்ட பிள்ளைகளையும் குழுவினர் அச்சுறுத்தினார்கள். பாதிரியார், பிரதேசத்திலிருந்த பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றைப் பதிவு செய்தார். தாக்கியோர், கிராமத்தை விட்டு அகன்றுவிட்டதனால், பொலீஸார் எதுவும் செய்ய முடியாதென்று பாதிரியாருக்குக் கூறப்பட்டது. அதே நாளன்று, கிட்டத்தட்ட நள்ளிரவில், தாக்கியோருள் சிலர் மீண்டும் வந்து, அடுத்த நாள் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்ப வேண்டாமென்று கிறிஸ்த குடும்பங்களுக்கு எச்சரிக்கை விடுத்தனர். மீறிப் பிள்ளைகளை அனுப்பினால், அவர்கள் கொல்லப்படுவார்கள் என்றும் கூறினர். 2008 ஆம் ஆண்டு, ஒகஸ்ட் மாதம் 17 ஆந் திகதி, புத்தள மாவட்டத்திலுள்ள மற்றொரு தேவாலயம், தீ வைப்புத் தாக்குதலின் இலக்காக அமைந்தது.

2008 ஆம் ஆண்டு, ஜுலை மாதம், பிரதேசப் பொலீஸ் களுத்துறையிலுள்ள அஸெம்ப்ளி ஒஃப் கோட் தேவாலயத்தின் பாதிரியார் ரொய்ஸ்டனை, தேவாலயத்தில் பூஜைகளைத் தொடக்கலாகாதென்று எச்சரித்தனர். இவ்வாலயத்திற்கெதிராக இப்பிரதேசத்தில் எதிர்ப்பு ஊர்வலங்கள் இடம்பெற்றன. பிரதேச பொலீஸ் நிலையத்திற்கு வரும்படி பாதிரியார் கேட்கப்பட்டார். அவர், தனது வழக்குரைஞருடன் பொலீஸ் நிலையத்திற்குச் சென்றபோது, 50 பேரைக்கொண்ட ஒரு குழு அவரை எதிர்கொண்டது. இவர்களுள் பத்துப் பேர் பௌத்த பிக்குகள். வழக்குரைஞர் அங்கிருப்பதைத் தாம் ஆட்சேபிப்பதாக புத்தகுருமார் கூறினர். எனவே, அவரை மற்றொரு அறையில் இருக்குமாறு ரொய்ஸ்டன் கேட்டுக்கொண்டார். இதன் பின்னர், வழக்குரைஞரின் அடையாள அட்டையைக் காட்டுமாறு கேட்டனர். தான் தனது அடையாள அட்டையைக் காட்ட வேண்டிய கடப்பாடு தனக்கு இல்லை என்று கூறி அதைக் காட்ட மறுத்ததும், பொலீஸாரின் முன்னிலையில், பிக்குகளும் ஏனையோரும் அவரைத் தாக்க முயன்றனர். வழக்குரைஞர், தாக்குதலைத் தவிர்த்துக்கொள்ள முடிந்தது. தேவாலயத்தை அழிக்கப்போவதாகக் கூடியிருந்த கும்பல் சத்தமிட்டது. அதன் பின்னர், தேவாலயப் பூஜைகளை நிறுத்தும்படி, பிரதேச பொலீஸார், ரொயிஸ்டனுக்கு அறிவுரை வழங்கினர்.

மடுப்பிரதேசத்தில் அரசாங்கப் பாதுகாப்புப் படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் போர்ச் செயல்கள் அதிகரித்துக்கொண்டிருந்ததால், இவற்றிலிருந்து மடு மாதாவின் சிலையைப் பாதுகாப்பதற்காக, 2008ஆம் ஆண்டு, ஏப்ரில் மாதத்தில் மன்னார் ஆயர், அச்சிலையை, மடுத் தேவாலயத்திலிருந்து தேவன்பிட்டியிலுள்ள பரிசுத்த சேவியர் தேவாலயத்திற்கு மாற்றினார். குடிமக்களுக்கு நுழைதிறனை வழங்குவதற்காக, தேவாலயத்திலிருந்து குறைந்தது 1.2 மைல்களுக்கு அப்பால் இருக்கும்படி, மன்னார் ஆயர், அரசாங்கத்தையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் கேட்டுக்கொண்டார். அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடந்த சண்டை, மடுப் பிரதேசத்தின் வடக்கை நோக்கிப் பெயர்ந்ததும், 2008 ஆம் ஆண்டு, ஓகஸ்ட் மாதம் 6 ஆந் திகதி, மன்னார் ஆயர், சிலையை மீண்டும் மடுத் தேவாலயத்திற்கு எடுத்துச்செல்லக் கூடியதாக இருந்தது. நாட்டின் மிக முக்கிய கத்தோலிக்க தேவாலயமாக மடு கருதப்படுகின்றது.

2008 ஆம் ஆண்டு ஏப்ரில் மாதத்தில், வன்னியில் இடம்பெற்ற (வட மாகாணம்) மனித உரிமைகள் மீதான வட கிழக்குச் செயலகத்தின் தலைவர், பிதா எம். எக்ஸ். கருணரத்தினத்தின் கொலை பற்றி, இந்த அறிக்கையில் உள்ளடக்கப்படும் காலப்பகுதியில், இந்நாள் வரையில் எவ்வித விபரமும் பெறப்படவில்லை.

புதிய தேவாலயக் கட்டிடம் நிர்மாணித்தல் தொடர்பாக கம்பக, களனியில் உள்ள ∴போர்ஸ்குவயர் கொஸ்பல் தேவாலயத்திற்கு வழங்கப்பட்ட அங்கீகாரம் தள்ளுபடி செய்யப்பட்டமைக்குப் பரிகாரம் கோரி, மேன்முறையீட்டு நீதி மன்றத்தில், 2008ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் தொடுக்கப்பட்ட வழக்குத் தொடர்பாக, இந்நாள் வரையில் எவ்வித விபரமும் பெறப்படவில்லை.

கொட்டாஞ்சேனையிலுள்ள ஓர் இந்துக் கோவிலில், பாராளுமன்ற உறுப்பினர் டி. மகேஸ்வரன், 2008ஆம் ஆண்டு, ஜனவரி மாதத்தில் கொலை செய்யப்பட்டமை தொடர்பாக இந்நாள் வரையில் எவ்வித விபரமும் பெறப்படவில்லை. இதில் பிரதான சந்தேக நபர், மகேஸ்வரின் பாதுகாப்புக் குழுவின் ஓர் முன்னைய அங்கத்தவராவார். அரசாங்கச் சார்பான ஈழம் மக்கள் ஜனநாயகக் கட்சி என்ற தமிழ்க் கட்சியுடன் இவருக்குத் தொடர்பிருந்தது. எனினும், தமிழீழ விடுதலைப் புலிகளே இதற்குப் பொறுப்பென்று பொலீஸ் நாயகம் கூறினார்.

நீர்கொழும்பிற்கு அண்மையில், பாதிரியார் விக்டர் யோகராஜனும் அவருடைய இரண்டு புதல்வர்களும் 2007ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் கொலை செய்யப்பட்டமை தொடர்பாக இந்நாள் வரை எவ்வித விபரங்களும் பெறப்படவில்லை. 2007 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இவர்கள் மூவரும் காணாமற் போனார்கள்.

மன்னாரில், ஜெஸுவிட் அகதிகள் சேவையின் மன்னார் ஒருங்கிணைப்பாளரான, பிதா நிக்கலஸ்பிள்ளை பாக்கியரஞ்சித், 2007 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் கொலை செய்யப்பட்டமை தொடர்பாக இந்நாள் வரை எவ்வித விபரங்களும் பெறப்படவில்லை.

தன்னுடைய உறவினர்களைச் சந்திப்பதற்காகப் பயணம் செய்துகொண்டிருக்கும் போது, 2007 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம், கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்ட இந்து சமயக் குருவான சுப்ரமணியசர்மா கேதீஸ்வரக் குருக்கள் கொலை செய்யப்பட்டமை தொடர்பாக, இந்நாள் வரை எவ்வித விபரமும் பெறப்படவில்லை.

யாழ்ப்பாணத்தில், வேலனையில், 2007ஆம் ஆண்டு, ஏப்ரில் மாதம், இந்து சமயக் குருக்கள் இரத்தினசபாபதி ஐயர் சோமகாந்தன் கொலை செய்யப்பட்டமை தொடர்பாக, இந்நாள் வரை எவ்வித விபரமும் பெறப்படவில்லை.

2007ஆம் ஆண்டு, ஜனவரி மாதம், யாழ்ப்பாணத் தமிழ் மிஷனைச் சேர்ந்த வண. நல்லதம்பி ஞானசீலன், அரசாங்கப் பாதுகாப்புப் படைகளினால் கொலை செய்யப்பட்டமை தொடர்பாக, இந்நாள் வரை எவ்வித விபரமும் பெறப்படவில்லை.

நாட்டில், சமயக் கைதிகள் பற்றியோ, தடுத்து வைக்கப்பட்டவர்கள் பற்றியோ எவ்வித அறிக்கைகளும் இல்லை.

**கட்டாய மதமாற்றம்**

ஐக்கிய அமெரிக்காவிலிருந்து கடத்தப்பட்ட, அல்லது சட்ட விரோதமாக அழைத்துச்செல்லப்பட்ட, பிராயமடையாத ஐக்கிய அமெரிக்கப் பிரஜைகள் அல்லது அத்தகைய பிரஜைகளை ஐக்கிய அமெரிக்காவிற்குத் திருப்பி அனுப்புவதற்கு அனுமதி மறுக்கப்பட்ட பிரஜைகள் உட்பட, கட்டாய மதமாற்றம் எதுவும் அறிவிக்கப்படவில்லை.

**புரட்சிப்படைகள் அல்லது வெளிநாட்டுப் படைகள் அல்லது பயங்கரவாத அமையங்களினால் துன்புறுத்தப்படுதல்**

தமிழீழ விடுதலைப் புலிகளின் இயக்கம், வெளி நாட்டுப் பயங்கரவாத அமையமாகுமென்று, 1997ஆம் ஆண்டு முதல் ஐக்கிய அமெரிக்காவினால் பட்டியற்படுத்தப்பட்டுள்ளது. முஸ்லிங்களும் இந்துக்களும் பௌத்தர்களும் கிறிஸ்தவர்களும் தமிழீழ விடுதலைப் புலிகளினால் வஞ்சந்தீர்க்கப்பட்டுள்ளனர். இவ்வாறு வஞ்சந்தீர்க்கப்பட்டவர்கள் சமயரீதியாகத் தெரிவு செய்யப்பட்டார்களென்று தோன்றவில்லை.

1990ஆம் ஆண்டில், தமிழீழ விடுதலைப் புலிகள், நாட்டில் வடக்கில் வாழ்ந்த, கிட்டத்தட்ட 46,000 முஸ்லிம் மக்களை – அப்பிரதேசத்தில் வாழ்ந்த ஏறத்தாழ முழு முஸ்லிம் மக்களையும் - அவர்களின் வீடுகளிலிருந்து வெளியேற்றினார்கள். இவர்களுள் பெரும்பாலானோர், இடம்பெயர்ந்தோராக இருந்தனர்É இவர்கள் நலன்புரி மையங்களில், அல்லது நலன்புரி மையங்களுக்குச் சமீபத்தில் வாழ்ந்துவந்தனர். 1997ஆம் ஆண்டில் சில முஸ்லிங்கள், வடக்கிலுள்ள யாழ்ப்பாண நகரத்திற்குத் திரும்பியபோதிலும், தமிழீழ விடுதலைப் புலிகளின் தொடர்ச்சியான அச்சுறுத்தலினால், அங்கு தங்கவில்லை. மன்னார் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கான முஸ்லிங்கள், மோதல்கள் முடிவுக்கு வரும் வரை, தமது வீடுகளுக்குத் திரும்பக்கூடாதென்று தமிழீழ விடுதலைப் புலிகளினால் எச்சரிக்கப்பட்டனரென்று கூறும் நம்பத்தகுந்த அறிக்கைகள் காணப்படுகின்றன. தமிழீழ விடுதலைப் புலிகளின் முஸ்லிங்களுக்கெதிரான செய்கைகளுக்கு, முஸ்லிங்களின் சமய நம்பிக்கைகள் காரணமல்லவென்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அனுதாபிகளாக இல்லாதவர்களை, வடக்கிலிருந்தும் கிழக்கிலிருந்தும் அப்புறப்படுத்தும் முற்றுமுழுதான தந்திரோபாயத்தின் ஓர் அம்சமாக முஸ்லிங்கள் அமைந்தார்கள் என்றும் தோன்றுகின்றது. தமிழீழ விடுதலைப் புலிகள், இணக்கப்பாடான சில கூற்றுக்களை முஸ்லிங்களுக்கு விடுத்தபோதிலும், அக்கூற்றுக்களை முஸ்லிங்கள் ஐயத்துடனேயே நோக்கினார்கள். உள் நாட்டில்

சில பிரதேசங்களில் இடம்பெயர்ந்த முஸ்லிங்களைத் தத்தமது வீடுகளுக்குத் திரும்பும்படியும் அவர்களுக்குத் தீங்கு விளைவிக்கப்பட மாட்டாதென்றும் தமிழீழ விடுதலைப் புலிகள், பின்னர், முஸ்லிங்களை ஊக்குவித்து வந்தனர். உள் நாட்டில் இடம்பெயர்ந்த சில முஸ்லிங்கள் தமது வீடுகளுக்குத் திரும்பிய போதிலும், பெரும்பாலானோர் திரும்பவில்ல. தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழிருந்த பிரதேசங்களில் பாதுகாப்பை அரசாங்கம் உத்தரவாதப்படுத்தும் வரை அவர்கள் காத்திருந்தார்கள். 2002ஆம் ஆண்டுப் போர் நிறுத்த உடன்படிக்கையின் பின்னர், தமிழீழ விடுதலைப் புலிகள், கிழக்கில் பல தாக்குதல்களை நடத்தினர். இவற்றில் முஸ்லிங்கள் கொல்லப்பட்டனர். இந்த அறிக்கை உட்படுத்தும் காலப்பகுதியின் இறுதியில் இச்சம்பவங்கள் தொடர்பாக கைதுகள் எதுவும் செய்யப்படவில்லை. 2009 ஆம் ஆண்டு மே மாதத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளை, இராணுவரீதியாக அரசாங்கம் தோற்கடித்த போதிலும் முஸ்லிம் பிரஜைகள் விரைவில் தமது முன்னைய இல்லங்களுக்குத் திரும்பிச் செல்வார்களா என்பது தெளிவாக இல்லை.

போர் நடவடிக்கைகள் இடம்பெறும் சந்தர்ப்பங்களில், வந்து கூடும்படி அரசாங்கத்தினால் மக்களுக்கு அறிவுறுத்தப்பட்ட தேவாலய வளவுகளையும் கோயில் வளவுகளையும், ஆயுதங்களைக் களஞ்சியப்படுத்துவதற்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் பயன்படுத்துவதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது.

## பிரிவு III. சமயச் சுதந்திரத்திற்குள்ள மதிப்பு நிலை

சமய வேறுபாடுகளை அடிப்படையாகக் கொண்ட பாரபட்சங்கள், இன வேறுபாடுகளை அடிப்படையாகக் கொண்ட பாரபட்சங்களை விட மிகவும் குறைவாக இருந்தன. பொதுவாக, பல்வேறு சமயங்களின் அங்கத்தவர்களும், மற்றைய சமய நம்பிக்கைகள் தொடர்பாக, சகிப்புத்தன்மையுள்ள போக்கைக் கொண்டிருந்தனர். எனினும், ‘நன்னெறிசாராத’ அல்லது கட்டாய மதமாற்றங்களில் கிறிஸ்தவர்கள் ஈடுபடுகின்றனரென்ற, தீவிர பௌத்தர்களின் குற்றச்சாட்டுக்கள், இவ்விரு சமுதாயங்களுக்கிடையிலும் மன அலைவிற்கு ஒரு காரணமாகத் தொடர்ந்தும் இருந்து வந்தது. மக்கள் தமது சொந்த விருப்பத்தின் பேரிலேயே மதம் மாறுகின்றார்கள் என்று கூறி, கிறிஸ்தவர்கள் இக்குற்றச்சாட்டை நிராகரித்தார்கள். மதமாற்றும் குழுக்களைச் சேர்ந்த சில அங்கத்தவர்கள், மதமாற்றும் நடவடிக்கைகளில் ஈடுபடுகையில், பௌத்த மதத்தைப் பற்றி இழிவான கருத்துக்களைக் கூறினரென்று கூறும் அறிக்கைகள் உள்ளன. கிறிஸ்தவர்கள் தீவிரமான மதமாற்றத்தில் ஈடுபட்டனரென்றும் பொதுவான வறுமை, போர், கல்வியின்மை என்பன போன்ற சமூகஞ்சார்ந்த இடர்களைத் தமது நலனுக்காகப் பயன்படுத்திக்கொண்டனரென்றும் சில குழுக்கள் குற்றஞ்சாட்டின. தாம் வழங்கும் உதவிகளினால் நலம் பெறுவோரை மதம் மாற்றுவதை, தமது நிவாரண முயற்சிகள் இலக்காகக் கொண்டிருக்கவில்லையென்று கிறிஸ்தவர்கள் வாதாடினர்.

இந்த அறிக்கை உள்ளடக்கும் காலப்பகுதியில், சகல குழுக்களையும் சேர்ந்த கிறிஸ்தவர்கள், சில சமயங்களில், தொல்லைகளுக்கும் தமது சொத்துக்களும் வழிபாட்டு இடங்களும் தாக்கப்படுவதற்கும் தாம் ஆளாயினர் என்றனர். மதமாற்றங்களை எதிர்த்தவர்களும், இக்குழுக்களால் தமக்கு அச்சுறுத்தல் ஏற்படுகின்றதென்று நம்பியவர்களுமான பிரதேசத்தில் வாழ்ந்த சில பௌத்தர்கள் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். தம்மை இலக்காகக்கொண்டு இழைக்கப்பட்ட தொல்லைகளையும், வன்முறைகளையும் அரசாங்கம், வாய் பேசாது, அவற்றைப் பொருட்படுத்தாது விட்டதென, சில கிறிஸ்தவ குழுக்கள், சிற்சில சமயங்களில் முறையிட்டன. இவர்களின் கோரிக்கையின் பேரில், பொலீஸ் பொதுவாக, இக்குழுக்களுக்குப் பாதுகாப்பு வழங்கியது. சில சந்தர்ப்பங்களில் பொலீஸின் துலங்கல் போதிய அளவில் அமையவில்லைÉ

பிரதேச பொலீஸ் அதிகாரிகள், இத்தாக்குதல்களில் சம்பந்தப்பட்ட, தனிப்பட்ட ஆட்களுக்கெதிராகச் சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தயங்கினரென்று அறிவிக்கப்படுகின்றது. கிறிஸ்த தேவாலயங்கள், அமையங்கள், மதத் தலைவர்கள் அல்லது வழிபாட்டிற்காகக் கூடியிருந்தவர்கள் மீது பல தாக்குதல்கள் இடம்பெற்றதாகவும் இவற்றுள் பல பொலீஸிற்கு அறிவிக்கப்பட்டதாகவும் இலங்கைத் தேசிய, கிறிஸ்த மதம் பரப்பும் கூட்டமைப்பு அறிவித்தது. நம்பகமான சில மூலாதாரங்கள், இத்தாக்குதல்களில் சிலவற்றை உறுதிப்படுத்தின. 2008 ஆம் ஆண்டு, ஏப்ரில் மாதத்திலும் மே மாதத்திலும் தேவாலயங்கள் மீது ஏற்படுத்தப்பட்ட தாக்குதல்களின் எண்ணிக்கையில் பொதுவான அதிகரிப்புக் காணப்பட்டது. மிகவும் பாரதூரமான தாக்குதல், கொழும்பு மாவட்டத்தில் தலங்கமையில் இடம்பெற்றது. இங்கு, பௌத்த குருமார்களின் தலைமையில் கும்பல்கள் கல்வாரி தேவாலயத்தைத் தாக்கி, கட்டிடத்தை அழித்து, பாதிரியாரைக் கடுமையான காயங்களுக்குள்ளாக்கினார். இத்தாக்குதல்களைத் தொடர்ந்து எவரும் கைது செய்யப்படவில்லை.

2009ஆம் ஆண்டு, ஜூன் மாதம் 23 ஆம் திகதி, மோட்டார் சைக்கிளில் வந்த ஒரு குழு, பொலன்னறுவையிலுள்ள ஃபோர்ஸ்குவெயர் கொஸ்பல் தேவாலயத்தின் பாதிரியாரை கத்திகளினால் தாக்கி, அவருடைய கழுத்தை வெட்ட முயற்சி செய்தனர். பிரதேச பொலீஸ், விசாரணைகளை நடத்தியது. ஆனாலும் இந்த அறிக்கை உள்ளடக்கும் காலப்பகுதியின் இறுதி வரை எவரும் கைதுசெய்யப்படவில்லை. இந்த அறிக்கை உள்ளடக்கும் காலப்பகுதியின் இறுதியில், பாதிரியாரின் பாதுகாப்பிற்காக, பொலீஸ் மெய்க்காப்பாளர் ஒருவரை வழங்கினார்கள்.

2009 ஆம் ஆண்டு, ஜூன் 7 ஆந் திகதி மன்னாரிலுள்ள அப்போஸ்டலிக் தேவாலயத்தை ஒரு கும்பல் தாக்கி அழித்தது. ஏழு பேர் கைது செய்யப்பட்டனர். பிரதேச நீதிவான் நீதி மன்றத்தில் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது.

2009 ஆம் ஆண்டு, ஜூன் மாதம் 6 ஆந் திகதி, ஏழாம் நாள் அட்வென்டிஸ்டைச் சேர்ந்த பாதிரியார், ஒரு மாநாட்டில் கலந்துகொண்ட பின்னர், கொழும்பிலிருந்து பஸ்ஸில் வீடு திரும்பத் திட்டமிட்டிருந்தார். இவர் வவுனியா பிரதேசத்தைச் சேர்ந்தவர். வவுனியாவிலிருந்த மனைவியைத் தொலைபேசியில் அழைத்து, வீடு திரும்புவதைப் பற்றிக் குறிப்பிட்டார். ஆனால், இவர் வீடு வந்து சேரவே இல்லை. இதற்கு முன்னர், 2008 ஆம் ஆண்டில் ஒரு தடவை இவர் கடத்தப்பட்டு, பின்னர் விடுவிக்கப்பட்டார்.

2009 ஆம் ஆண்டு, ஜூன் 3 ஆந் திகதி, மின்னேரியாவில், கத்தோலிக்கக் கன்னியாஸ்திரி மடம் பிரசாதினியிலிருந்து பத்து வயது நிரம்பிய யேசுநாதரின் சிலை, அழிக்கப்பட்டதென்று அறிவிக்கப்பட்டது. மின்னேரியாவில் வாழ்ந்த மற்றுமொரு குடும்பத்திற்குச் சொந்தமான யேசுநாதரின் சிலை எடுக்கப்பட்டு உடைக்கப்பட்டது.

2009 ஆம் ஆண்டு, ஏப்ரில் 8ஆந் திகதியைத் தொடர்ந்து வந்த வாரத்தில், அம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள வீரகெட்டிய மாவட்டத்திலிருக்கும் ஜீவனாலோக்க சபா (ஒரு சுதந்திரமான கிறிஸ்த தேவாலயம்), பல அச்சுறுத்தல்களை எதிர்நோக்கியது. ஏப்ரில் 8ஆந் திகதி, பாதிரியாரின் வீட்டிற்கு வெளியில் நின்றவாறு, நான்கு பேர் ஷஷகிறிஸ்தவனே, வெளியே வா” என்று கத்தினர். அத்தருணத்தில், வீட்டில் தனியாக இருந்த பாதிரியாரின் மனைவியும் இரண்டு பிள்ளைகளும் பயந்தனர். இதற்குச் சற்றுப் பின்னர் பாதிரியார் வீடு திரும்பினார். காலைக்குள் கிராமத்தை விட்டு

வெளியேறாவிட்டால், அவர் கொலை செய்யப்படுவார் என்று அச்சுறுத்தும் தொலைபேசி அழைப்பொன்று அவருக்கு வந்தது. வீட்டிற்கு வெளியே காணப்பட்ட நால்வருள் ஒருவன் என்று கருதப்பட்ட, அழைப்பு விடுத்த நபர், அன்றிரவு, அச்சுறுத்தும் மேலும் பல அழைப்புக்களை மேற்கொண்டான். பின்னர், அவன் மீண்டும் பாதிரியாரின் வீட்டை அடைந்து, கதவைத் தட்டி, பாதிரியாரை வெளியே வரும்படி அழைத்தான். பொலீஸ் வந்து அவனைக் கைது செய்யும் வரை இம்மனிதன் தொடர்ந்து பேசித் தொந்தரவு செய்தான். மறு நாள், சந்தேக நபரைப் பொலீஸ் விடுவித்தது. அவன், வேறு கிராமவாசிகளினதும் பிரதேசத்திலிருந்த பல பௌத்த கோவில்களினதும் உதவியுடன் தேவாலயத்திற்கெதிராக மனு ஒன்றைத் தயாரித்தான். பாதிரியாரை வீட்டிலிருந்து வெளியேற்றும் படியும் இல்லையேல், சொத்திற்குப் பெருஞ் சேதம் விளைவிக்கப்படுமென்றும் வீட்டுச் சொந்தக்காரருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது. பாதிரியாரின் பிள்ளைகள், பாதுகாப்புக் கருதி இடம் மாற்றப்பட்டனர். முற்காப்பு நடவடிக்கையாக, பெரிய வெள்ளி பூஜைகளும் உயிர்த்தெழுந்த ஞாயிற்றுப் பூஜைகளும் இரத்துச் செய்யப்பட்டன. பாதிரியாரைத் தாக்குவதற்கான சதிகளைப் பற்றி, பாதிரியாருக்குத் தொடர்ச்சியாக தகவல்கள் கிடைத்த வண்ணம் இருந்தன.

2009 ஆம் ஆண்டு, ஏப்ரில் மாதம் 5 ஆந் திகதி, இனங்காணப்படாத ஒரு கும்பல், கொழும்பு மாவட்டத்திலுள்ள தெகிவலையில் பபிலியானையிலுள்ள மெதடிஸ்ட் தேவாலயத்தினுள் புகந்தது. 150 வருடம் பழமைவாய்ந்த தேவாலயத்தினுள் சென்ற இவர்கள், பெறுமதி மிக்க இசைக் கருவிகள், விவிலிய நூல்கள், துதிப்பாடல் நூல்கள், தூய நீராட்டு, திருமணப் பதிவுகள் உட்பட ஆவணங்கள் என்பவற்றைக் கொள்ளையடித்தனர். பண மதிப்பற்ற, தேவாலய ஆவணங்களை வேண்டுமென்றே அகற்றியமை, இவர்கள் கொள்ளையடித்ததன் நோக்கம் களவு அல்ல என்பதைக் குறிப்பாகத் தேவாலயம் நம்பியது. பாரம்பரிய ஊர்வலத்துடன், குருத்தோலை ஞாயிறைக் கொண்டாடிய மறு நாள் இரவு இச்சம்பவம் நிகழ்ந்தது. பொரலெஸ்கமுவ பொலீஸ் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

2009 ஆம் ஆண்டு, ஏப்ரில் மாதத்தில், மட்டக்களப்பு மாவாட்டத்திலுள்ள வாகரையில் கொம்மாதலமடுவிலும் ஆமந்தன் வேலியிலும் வழிபாட்டுக் கூட்டங்கள் பலவற்றிலும் கிறிஸ்தவர்கள், அச்சுறுத்தல்கள் காரணமாக வழிபாட்டுப் பூஜைகளை நடத்துவதில் பிரச்சினைகளை அனுபவித்தனர். கிறிஸ்த குடும்பங்களுக்கு விஜயம் செய்த பாதிரி ஊழியரை, பெரும்பான்மையாக இருந்த இந்துக் கிராமவாசிகள் துரத்தினர்.

2009 ஆம் ஆண்டு, மார்ச் மாதத்தில், கம்பக மாவட்டத்தில் உடுகம்பொலவிலுள்ள கல்வரி பிரார்த்தனை மையத்திற்கெதிராக ஓர் எதிர்ப்பு ஊர்வலம் இடம் பெற்றது. இளைஞர்களைக் கடத்துவதில் தேவாலயம் ஈடுபட்டுள்ளது என்பதே இதற்குக் காரணமாகக் காட்டப்பட்டது. எதிர்ப்பு ஊர்வலத்தின் போது வன்முறைகள் ஏற்படுவதைத் தடுக்கும் பொருட்டு பொலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

2009 ஆம் ஆண்டு, மார்ச் மாதத்தில், அகன்ற வெட்டுக்கத்தியுடன் ஒரு மனிதன், குருணாகலை மாவட்டத்தில் பன்னலையிலுள்ள வின்யார்ட் சமுதாய தேவாலயத்தைச் சேர்ந்த உதவிப் பாதிரியாரையும் தேவாலய ஊழியரொருவரையும் தாக்கினான். பன்னலை பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. சிரேஷ்ட பாதிரியார் ஒருவரின் கூற்றின்படி, பொலீஸார் குற்றச் சம்பவ இடத்திற்கு விஜயம் செய்தனர். ஆனால், ஒருவரும் கைதுசெய்யப்படவில்லை.
2009 ஆம் ஆண்டு, ஜனவரி முதல் மார்ச் மாதம் வரையும், கேகாலை மாவட்டத்தில் புலத்கொகுபிட்டியிலுள்ள அஸெம்ப்ளி ஒஃ கோட் தேவாலயம் அச்சுறுத்தலுக்குள்ளாகியது.

கும்பல்கள், பிரார்த்தனைக்காக வந்திருந்தோரைத் திட்டி, ஞாயிறு வழிபாட்டுப் பூஜையில் கலந்துகொள்வதைத் தடுத்தனர். கும்பல்களைத் தூண்டி விட்டவர்களும் பிரதேசத்தைச் சேர்ந்த பௌத்த பிக்குகள் பலரும், தேவாலயத்தை மூடிவிடும்படி, சமய அலுவல்கள் அமைச்சிற்கு மனுச்செய்தனர். தேவாலயத்தை மூடுவதற்காகக் கலந்துரையாடும் பொருட்டு, குழுக்கள் கிராமத்தில் கூட்டங்களை நடத்தின.

2009 ஆம் ஆண்டு, ஜனவரி மாதத்தில், பௌத்தர்கள் ஏனைய மதங்களுக்கு மதமாற்றஞ் செய்யப்படுவது பற்றி அறிக்கையொன்றைத் தயாரிக்கும்படி அகில இலங்கை பௌத்த கொங்கிரஸ் (ACBC) நியமித்த ஆணையத்தின் அறிக்கை வெளியிடப்பட்டது. அரசாங்கச்சார்பற்ற நிறுவனங்கள், ஏனைய தர்ம அமையங்கள் என்பன உட்பட, நன் நெறிசாராத மதமாற்றங்கள் என்று அது குறிப்பிட்ட மதமாற்றங்களைப் பற்றி விசாரணை நடத்தும்படி, 2006 ஆம் ஆண்டில், அகில இலங்கை பௌத்த கொங்கிரஸ் ஓர் ஆணையத்தை நியமித்தது. இந்நடவடிக்கைகளின்போது, கிறிஸ்த தேவாலயங்களுக்கெதிராக எழுப்பப்பட்ட குற்றச்சாட்டுக்கள், நன் நெறிசாரா மதமாற்றங்கள் முதல், பொருட்களைக் காட்டி மக்களைத் தம் பால் ஈர்த்தல், பயங்கரவாதத்திற்கு ஆதரவளித்தல் வரையானவையாக அமைந்தன.

2008 ஆம் ஆண்டு, செப்டெம்பர் மாதம், ஒரு பௌத்த பிக்குவும் அவருக்கு உடந்தையான வேறு மூவரும், கொழும்பு கிராண்ட்பாஸில் அமைந்துள்ள, ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலை இழிவுபடுத்தித் தாக்கினர். இவர்கள், இரவில், கூரையினூடாகக் கோவிலுக்குள் நுழைந்து, புதிய அம்மன் சிலையையும், விஷ்ணு பகவானின் சிலையையும் சிவலிங்கச் சிலையையும் நொருக்கினர். அங்கு வாழ்ந்த மக்கள், பொலீஸிற்கு அறிவிக்க, பொலீஸார் வந்து அந்த நால்வரையும் கைது செய்தனர். இவர்கள், கொழும்பு, மேலதிக நீதிவான் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு, விளக்க மறியற் கட்டுக்காப்பில் வைக்கப்பட்டனர். பின்னர், பிணையில் விடுவிக்கப்பட்டனர். கிராண்ட்பாஸிலுள்ள, முக்கிய பௌத்த கோவில் தொகுதியின் பிரதான குருவே, குழுவின் தலைவனான ஸ்ரீ சபுகஸ்யயே தம்மானந்த தேர என்று அடையாளங்காணப்பட்டது.

2008 ஆம் ஆண்டு, ஓகஸ்ட் மாதம், புத்தள மாவட்டத்தில் நொரொச்சோலை, பன்னலடியிலுள்ள அஸெம்ப்ளி ஒ்ஃ. கோட் தேவாலயம் தீ வைக்கப்பட்டுக் கொழுத்தப்பட்டது. அன்று மாலை, இப்பிரதேசப் பாதிரியாரின் வீட்டிற்குச் சென்று, அவரை அச்சுறுத்திய குழுவே இத்தீவைப்பை நடத்தியதாகச் சந்தேகிக்கப்படுகின்றது. பொலீஸில் ஒரு முறைப்பாடு செய்யப்பட்டது. மூவர் கைது செய்யப்பட்டனர். ஆனால், பின்னர், இவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

## பிரிவு IV. ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தின் கொள்கை

மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கான தனது முற்றுமுழுதான கொள்கையின் ஒரு பகுதியாக, ஐக்கிய அமெரிக்க அரசாங்கம், சமய சுதந்திரம் பற்றிய பிரச்சினைகளை, அரசாங்கத்துடன் கலந்துரையாடுகின்றது. பரந்த அளவிலான மனித உரிமைகள், இன, மதச் சுதந்திரம் என்பன தொடர்பான கரிசனைகளை மீளாய்வு செய்வதற்காக, ஐக்கிய அமெரிக்கத் தூதரக அலுவலர்கள், நாட்டின் சகல சமயக் குழுக்களின் பிரதிநிதிகளையும் கிரமமாகச் சந்திப்பார்கள். இவ்வறிக்கை உள்ளடக்கும் காலப்பகுதியில், கிறிஸ்தத் தேவாலயங்களின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் பற்றிய ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தின் அக்கறையை வெளிப்படுத்துவதற்காகவும் மதமாற்றத்திற்கு எதிரான பிரச்சினைகளை ஆராய்வதற்காகவும் தூதரகப் பிரதிநிதிகள் மிக உயர்மட்ட அரசாங்க அலுவலர்களைச் சந்தித்தனர்.

தற்பொழுது மோதல்கள் முடிவடைந்துவிட்டதால், ஐக்கிய அமெரிக்க அரசாங்கம், அரசியல் இணக்கப்பாட்டைத் தீவிரமாக ஆதரிக்கின்றது. மோதலுக்கு அடிப்படையாக அமைந்த காரணங்களுக்குச் சமயத் தலைவர்கள் சமாதானமான தீர்வுகளைக் காண்பதற்கு மேற்கொள்ளும் சமய இடை முயற்சிகளை மேம்படுத்துவதை ஐக்கிய அமெரிக்கத் தூதரகம் ஆதரிக்கின்றது.